# எல்பிட்டிய பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, எல்பிட்டிய பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்பிட்டிய பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற போது சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 17 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 9,924,527 ஆக இருந்தது.

**(ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 57,322,435 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,038,427 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,240,088 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,735 | 3,415 | 4,008 |
| (ii) | வாடகை | 1,328 | 2,072 | 423 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,002 | 699 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,256 | 29,366 | 7,973 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 304,250 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,669,685 |

### 2.2.3 கடைகளை வாடகைக்கு விடல்

உயர்தர வியாபாரத் தொகுதியில் 31 கடைகள் 2003 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 17 வாடகையாளர்களிடமிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய நிலுவை வாடகைத் தொகை ரூபா 229,555 ஆக இருந்ததுடன் 2012 மே 23 கணக்காய்வுத் திகதி வரையில் ரூபா 99,670 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதி தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சகல உடன்படிக்கைகளும் 3 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுற்றுநிருபத்தின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் கடைகளுக்காக மதிப்பீட்டாளரினால் பெறப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல கடைகளுக்குமான கடை வாடகை தீர்மானிக்கப்படவில்லை.

**2.2.4 பெகோ இயந்திரத்தை வாடகைக்குவிடல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெகோ இயந்திரத்தை வாடகைக்கு வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சின் பிரகாரம் முற்பணத் தொகை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடு இன்றி முற்பணத்தொகை பெறப்பட்டு பெகோ இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) முன்னைய ஆண்டு மற்றும் மிளாய்வாண்டின் போது சபையின் உறுப்பினர்களுக்கு பெகோ இயந்திரத்தை வாடகைக்கு விட்ட வகையில் 2012 மே 23 கணக்காய்வுத் திகதி வரையில் ரூபா 107,270 தொகை கிடைக்க வேண்டியிருந்தன.

(iii) வெளித்தரப்பினருக்கு 2011 செப்தெம்பர் 14 ஆந் திகதி தொடக்கம் 22 ஆந் திகதி வரை 48.9 மணித்தியால மீற்றர் காலத்திற்காக பெகோ இயந்திரம் வாடகைக்கு விட்ட வகையில் கிடைக்க வேண்டிய ரூபா 83,130 தொகையிலிருந்து ரூபா 51,000 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன்

ரூபா 32,130 ஆன நிலுவைத்தொகை 2012 மே மாதம் 23 கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்**

மீளாய்வாண்டின் போது ரூபா 216,329 கூட்டுத்தொகையான 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

**2.4 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.4.1 ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்**

மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 29,259,386 தொகைக்கு 2010 யூலை 14 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2011 மார்ச் 05 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் உடன்படிக்கைக்குரிய தொகுதியின் கீழான நான்கு வீதிகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2012 மே 23 ஆந் திகதி வரையில் ரூபா 15,849,990 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2012 மே 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வல்லம்கல வீதியை அபிவிருத்தி செய்தல் (1000 மீற்றர்)**

ரூபா 1,097,645 தொகை செலவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வீதியின் 1.கி.மீற்றரான மொத்த துாரமும் வீதியின் மேற்பரப்பு கீழிறங்கியமையினால் குழிகள் ஏற்பட்டிருந்தன.

**(ஆ) மஹஜன மாவத்தை (840 மீற்றர்)**

நிர்மாணங்களுக்காக ரூபா 1,198,887 தொகை செலவிடப்பட்டிருந்தது. மாதிரிகளின் பிரகாரம் ஏபிசீ கல் இடப்பட்டு வீதியின் மேற்பரப்பு மட்டப்படுத்தப்பட்டு எம்சி 30 உருகிய தார் ஊற்றப்பட்டு (prime) அதன் பின்னர் முதலாவது மற்றும் இரண்டாவது தடவை தார் ஊற்றப்பட வேண்டியிருந்தது. எனினும் எல்பிட்டிய பிடிகல வீதி ஆரம்பமாகும் மஹஜன மாவத்தையின் ஆரம்பம் தொடக்கம் 606 மீற்றர் வரை எம்சீ 30 உருகிய தார் மாத்திரம் ஊற்றப்பட்டிருந்துடன் வீதியின் தெற்குப் பக்க காண் நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பச் சபையினால் வெட்டப்பட்டு நீர்க்குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தமையினால் வீதிக்கு பாரிய அளவில் சேதம் ஏற்பட்டிருந்தது. குழிகள் விழுந்து கற்கள் பரவலாக்கப்பட்டிருந்தது. கி.மீற்றர் 606 தொடக்கம் 840 வரையான வீதிப்பகுதி மாத்திரம் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

பொறியியலாளரின் வேலைத்தள அலுவலகத்திற்கான தளபாடங்களின் அளவிடைப் பத்திரங்களின் பிரகாரம் இணங்கப்பட்ட பெறுமதியான ரூபா 10,000 தொகையும், 2011 யூலை 12 ஆந் திகதி ரூபா 33,677 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் 2012 மே 21 கணக்காய்வுத் திகதி வரையில் ஒப்பந்தக்காரர்களினதும், பொறியியலாளர்களினதும் வேலைத்தள (Site Engineer) அலுவலகங்கள் மூடப்பட்டிருந்த போதிலும் உரிய தளபாடங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) எல்ல – ஊறன்வல – தலாவ மத்திய சனசமூக மண்டம்**

2006 நவம்பர் 20 ஆந் திகதி ரூபா 497,890 தொகையில் வேலைகளுக்காக சமுர்த்தி சங்கமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 03 மாதங்களாக இருந்தது. 2007 சனவரி 24 ஆந் திகதி ரூபா 137,992 தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் வேலை கைவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் முறையே ரூபா 300,000 தொகையான மதிப்பீடு மற்றும் ரூபா 44,212 தொகையான மேலதிக மதிப்பீட்டின் அடிப்படையில் 2010 ஒக்தோபர் 27 மற்றும் 2010 திசெம்பர் 06 திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் ஏனைய சமுர்த்திச் சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய கொடுப்பனவு அறிக்கையின் அடிப்படையில் 2011 சனவரி 06 ஆந் திகதி முறையே ரூபா 256,098 தொகை மற்றும் ரூபா 39,779 தொகைகள் சபை நிதியத்திலிருந்து அந்தச் சங்கத்திற்குச் செலுத்தபப்பட்டிருந்தன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களும் 06 மாதங்களுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த இந்த வேலைகளுக்காக ரூபா 433,869 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண முன்னேற்றம் 40% ஆக மாத்திரம் காணப்பட்டது.

(ii) சபையின் அங்கீகாரமோ அல்லது மேற்பார்வையோ இன்றி எல்பிட்டிய பிரதேச செயலாளரினால் கட்டிடத்தின் இரண்டு அறைகளுக்கு சாந்து பூசப்பட்டிருந்தன.

**2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**2.5.1 நூலகப் புத்தகங்கள்**

தலைமை அலுவலகத்தின் பொது நூலகத்தில் காணாமல் போன 3075 புத்தகங்களின் பெறுமதி ரூபா 267,150 ஆகும். கொழுவாமுல்ல – ஓமத்தை உப அலுவலகங்களின் நூலகத்தில் 265 புத்தகங்களும், அம்பன கஹதுவ உப அலுவலகத்தின் நூலகத்தில் 77 புத்தகங்களும் காணாமல் போயிருந்த போதிலும் நட்டம் கணிப்பீடு செய்யப்பட்டிராததுடன் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காலங்கடந்த வாசகர்களுக்கு விநியோகிக்கப்பட்ட 617 புத்தகங்கள் தொடர்பாகவும் எவ்வித படிமுறைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்**

கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

----------------------------------------

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்